**செ. கு. எண்**: 222 **நாள்**:2.12.2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – **2.12.2011**

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்து பரவலாக மழை பெய்து வருவதன் காரணமாக **1.12.2011** அன்று திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆவூர் – II கிராமத்தைச் சேர்ந்த திரு. செங்கையா ராஜா என்பவரின் மகன் திரு. கண்ணையன்; ஈரோடு மாவட்டம், பூந்துறை உள்வட்டம், கஸ்பாகனகபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பொன்னுசாமி என்பவரின் மகன் பாலசுப்பிரமணி; திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், மகிழம்பாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. சந்தியாகு என்பவரின் மகன் ஜோசப்தம்புசாமி ஆகியோர் மின்சாரம் தாக்கியதால் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், கண்டமநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. விஜயகுமார் என்பவரின் மகன் சிறுவன் யோகேஸ்வரன் ஏரியில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, மணவாயில் கிராமத்தைச் சேர்ந்த திரு. காசி என்பவரின் மனைவி திருமதி சிவப்பாயி ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

கனமழை காரணமாக பல்வேறு விபத்துகளில் மரணமடைந்த இந்த ஐந்து நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு லட்சம் ரூபாய் உதவித் தொகையை உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**